ஜவஹர்




# அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு: புதிய தமிழகத்துடன் மோதும் ஆதித் தமிழர் பேரவை!

தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில், உள் ஒதுக்கீடாக 3 சதவிகிதம் அருந்ததிய சமுதாயத்தினருக்கு ஒதுக்கி ஆணை பிறப்பித்தது கடந்த தி.மு.க. அரசு.

தலித் இயக்கத் தலைவர்களுக்குள் அப்போதே சலசலப்பை உண்டு பண்ணிய இந்த விவகாரத்தை இப்போது மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறார் புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி.

அருந்ததியர்களுக்கான உள் ஒதுக்கீட்டை ரத்து செய்ய வலியுறுத்தி டிசம்பர் 6-ம் தேதி சென்னையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார் டாக்டர் கிருஷ்ணசாமி. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, கிருஷ்ணசாமியைக் கைது செய்ய வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளது ஆதித்தமிழர் பேரவை.

ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமானிடம் இதுபற்றிப் பேசினோம்.

"அருந்ததியர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு என்பது சமூக நீதியை உள்வாங்கி, சரியான விகிதத்தில் வாய்ப்புகள் கிடைப்பதற்கான மறு பங்கீடுதான். கழிவை சுத்தப்படுத்தி வாழ்க்கை நடத்தும் மனிதர்களைத் தூக்கி விடுவதற்கு கிடைத்த வாய்ப்பு. பல கட்டப் போராட்டங்களுக்குப் பிறகு தான் இந்த இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை வழங்கக் கூடாது என்று சொல்கிறார் கிருஷ்ணசாமி. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பல தலைவர்கள் ஆதரவு தரும் வேளையில் கிருஷ்ணசாமி இதனை எதிர்க்கிறார்.

தனது மக்களுக்கான இட ஒதுக்கீட்டிற்காக அவர் போராடலாம். ஆனால் அருந்ததியர்க்கு கொடுக்கக் கூடாது என்று சொல்வதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? அருந்ததியர்க்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட நாள் கறுப்பு நாள் என்கிறார். மற்ற சமுதாயத்தினரைப் பார்த்து, அவர்களது இட ஒதுக்கீடு குறித்து கிருஷ்ணசாமி பேச முடியுமா?

உண்ணாவிரதம் இருக்க அவர் டிசம்பர் 6-ம் தேதியை தேர்ந்தெடுத்துள்ளார். முஸ்லிம்களுக்கு எதிராக ஆதிக்க சக்திகள் போர் தொடுத்த நாள் அது. அன்று கவர்னரிடம் மனு கொடுப்பேன் என்கிறார். அ.தி.மு.க. கூட்டணியில் ஜெயித்த இவர் முதல்வரைத்தானே சந்தித்து மனு கொடுக்க வேண்டும்?

18 சதவிகித இட ஒதுக்கீட்டில், அருந்ததியர்க்கு பல வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வந்தன. எடுத்துக்காட்டாக கோயமுத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 300 பேராசிரியர்களில், 30பேர் தலித்துகள். ஆனால் கடந்த 30 வருடங்களில் ஒரு அருந்ததியர் கூட பேராசிரியராக வந்ததில்லை. இந்தநிலையை மாற்ற நாங்கள் போராடி வருகிறோம்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா 3 சதவிகித இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தித் தருவேன் என்று தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார். அதை ஆறு சதவிகிதமாக உயர்த்தக் கோரி, வருகிற டிசம்பர் இரண்டாம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் தொடர் முழக்கப் போராட்டம் நடத்த உள்ளோம். கிருஷ்ணசாமியின் அறிவிப்பால் இரு சமுதாயங்களுக்கிடையே கலவரம் வரும் சூழல் உள்ளது. அரசு இதை வேடிக்கை பார்க்காமல், கிருஷ்ணசாமியை உடனடியாக கைது செய்ய வேண்டும்" என்றார்.

இது குறித்து புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியிடம் கேட்டோம்.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முறையான இட ஒதுக்கீடு வேண்டுமென 30 ஆண்டுகளாகப் போராடி வருகிறோம். போலிச் சான்றிதழ் மூலம் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் நடந்துள்ள மோசடிகளுக்கு எதிராகவும் போராடி வருகிறோம். தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பெறுவதற்காக, இப்படி தொடர்ந்து போராடி வருபவர்கள் நாங்கள். சிலர் போல் திடீரென்று இடையில் வந்து குரல் கொடுக்கவில்லை.


ஜெயலலிதா


கலைஞர்

தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் மாற்றம் செய்வதற்கு தமிழ்நாடு அரசிற்கு அதிகாரம் கிடையாது. உத்தரப்பிரதேச அரசில் தாழ்த்தப்பட்டோர் என சில சாதியினரை கூடுதலாகச் சேர்க்க முலாயம்சிங் அரசு முயற்சி செய்தது. அதைப்போல ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு தாழ்த்தப்பட்டோரை நான்கு பெரும் பிரிவுகளாக பிரித்து ஆணை பிறப்பித்தார். ஆனால் இவை எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. காரணம், தாழ்த்தப்பட்டோர் விஷயத்தில் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் என்ற அமைப்பு சில விஷயங்களை விசாரித்து முடிவெடுத்து, நாடாளுமன்றத்தின் அனுமதிபெற்று, மத்திய சமூக நீதித் துறையின் மூலம்தான் அறிவிக்கமுடியும். எந்த மாநிலமும் தனிப்பட்ட முறையில் எந்த அறிவிப்பையும் வெளியிட முடியாது.

தமிழ்நாட்டில் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களை பட்டியலின இட ஒதுக்கீட்டில் சேர்க்க 20 வருடமாக போராடுகிறார்கள். அவர்களை பட்டியலினத்தவராக அறிவிக்க, தமிழக அரசிற்கு அதிகாரம் கிடையாது.

அருந்ததியர்க்கு என மூன்று சதவிகித இடஒதுக்கீட்டை கலைஞர் அறிவித்தது வரலாற்றுப் பிழை. தாழ்த்தப்பட்டோரில் ஏற்றத்தாழ்வு கிடையாது. அவர்கள் ஒட்டு மொத்த சமூகமாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள். இதைத்தான் அண்ணல் அம்பேத்கரும் தனது ஒதுக்கீடு சார்ந்த விஷயங்களில் சொல்லியிருக்கிறார்.

தாழ்த்தப்பட்டோர் அனைவரும் இட ஒதுக்கீட்டிற்காக மட்டுமல்ல, சமூக நீதிக்காகவும் ஒன்றாக நிற்கவேண்டியவர்கள். 18 சதவிகிதத்தில் இப்போது மூன்று சதவிகிதம் தனியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் பிரித்து அறிவித்தால் நிலைமை என்னவாகும்? மற்ற சாதியினருக்கான ஒதுக்கீட்டில் இவ்வாறு பிரித்து அறிவிக்க முடியுமா?



கலைஞர், தான் மத்திய அரசில் அங்கம் வகித்ததை பயன்படுத்தி, அரசியல் உள்நோக்கத்துடன் இவ்வாறு அறிவித்து விட்டார். தமிழ்நாட்டில் மொத்தம் 77 தாழ்த்தப்பட்ட பிரிவினர் உள்ளனர். அவர்களுக்கு 18 சதவிகித இட ஒதுக்கீடு உள்ளது. அதில் 76 பேருக்கு 15 சதவிகித இட ஒதுக்கீடு. அருந்ததியர்க்கு மட்டும் மூன்று சதவிகிதம் என்றால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதா? அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மூன்று சதவிகிதம் தவிர, மீதமுள்ள 15 சதவிகித ஒதுக்கீட்டிலும் அவர்கள் வருகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் 18 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வெளியில் போய், தனியாக எத்தனை சதவிகிதம் இட ஒதுக்கீடு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளட்டும். அது அவர்களைச் சார்ந்தது. ஆனால் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்க்கு மூன்று சதவிகிதம் என்பதை எந்தச் சூழலிலும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார் உறுதிபட.

உள் ஒதுக்கீடு விவகாரத்தில் உள் மோதல் வந்துவிட்ட சூழலில் இதை கவனமாகக் கையாளவேண்டிய பொறுப்பு மத்திய, மாநில அரசுகளின் கைகளில் இருக்கிறது! ■

படங்கள்: ஏ.எஸ்.அருண்

> 18 சதவிகித இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்க்கு மூன்று சதவிகிதம் என்பதை எந்தச் சூழலிலும் ஏற்றுக்கொள்ள முடியாது